**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC.64/2022 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-7/PW- 3 <br> Name : கணேசன் (உதவி ஆய்வாளர்) <br> Father's/Husband's Name : கோவிந்தசாமி <br> Nationality : Indian | Village : கும்பகோணம் <br> Age : 54 <br> Taluk : <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 25.03.2026**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு திருவிடைமருதுார் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது 24.03.2020 ம் தேதி காலை 11 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது அசா1 வனிதா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண் 79/2020 சட்டபிரிவுகள் 294(பி), 324 இதச பிரிவுகளின் படி வழக்கு பதிவு செய்தேன். நான் பெற்ற புகார் மனு அசாஆ 1 ஆகும். நான் பதிந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 2 ஆகும். பின்பு வழக்கை புலன் விசாரணைக்கு உதவி ஆய்வாளர் கபீர்தாசன் பார்வைக்கு வைத்தேன். உதவி ஆய்வாளர் கபீர்தாசன் என்பவருடன்

சேர்ந்து பணிபுரிந்து வந்த காலத்தில் அவர் கையெழுத்து கையொப்பம் எழுத்து நடை நன்கு பரிட்சயம் என்பதாலும் வீண் காலதாமதம் மற்றும் பொருட்செலவை கருத்தில்கொண்டு ஆவணங்களின் அடிப்படையில் அவருக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன். உதவி ஆய்வாளர் கபீர்தாசன் வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்து கொண்டு 24.03.2020 ம் தேதி மதியம் 1 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஐயப்பன், ராஜா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகசர் அசாஆ 3 மற்றும் மாதிரிவரைப்படம் அசாஆ 4 ஆகும். பின்பு பார்வை மகசர் சாட்சிகள் ஐயப்பன், ராஜா ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு சம்பவ சாட்சிகள் வனிதா, முத்துக்குமார், மேகராஜ் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி சாட்சிகள் சம்பவத்தைப்பற்றி தெளிவாகவும் விளக்கமாகவும் வாக்குமூலத்தில் உள்ளபடி கூறினார்கள். மேற்படி சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும், புலன் விசாரணையிலிருந்தும், வழக்கு சம்பவம் உண்மை என்பது தெரிய வந்ததால் எதிரியை கைது செய்ய தேடியபோது எதிரியை 24.03.2020 காலை 11 மணிக்கு திருவிடைமருதுழர் காவல்நிலையத்திற்கு விசாரணைக்கு வந்தவரை தக்க காரணம் கூறி கைது செய்து தக்க இருநபர் ஜாமினில் பிணையில் விடுவித்துள்ளார். பின்பு காயம்பட்ட அசா1க்கு சிகிச்சை அளித்த கும்பகோணம் அரசு மருத்துவமனை மருத்துவர் சித்தார்த் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றேன். மேற்படி மருத்துவர் காயம்பட்ட அசா1 சிகிச்சையிலிருந்து தானாக சென்றுவிட்டபடியால் காயத்தின் தன்மை குறித்து சான்று வழங்க இயலாது என கருத்துரை வழங்கியுள்ளார். அவர் வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் அசாஆ 5 ஆகும். இறுதியாக இந்த வழக்கு விசாரணையை முடித்து

24.09.2020 ம் தேதி எதிரி மீது 294(பி), 324 இதச பிரிவுகள் படி அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதியிடம் தவறான தகவலை பெற்று பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeswari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர். (FAC)**